(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 7(3).]

# பாராளுமன்றம்

## 7ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 நவெம்பர் 08 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2012 நவெம்பர் 19, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2247/ '12

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2011 ஏப்பிரல் மாதம் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் பதவிக் காலம் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் முழுப்பெயர் மற்றும் தகைமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்காக வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட ஐந்து மாடிக் கட்டிடத்தொகுதியின் அமைவிடம் மற்றும் அதற்காக மாதாந்தம் செலுத்தப்பட்ட வாடகை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான சம்பளங்கள், நீர் கட்டணம், மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட மீண்டெழும் செலவினங்களுக்காக முதல் ஆறு மாதங்களில் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் கீழிருந்த 120 வரி மேன்முறையீட்டுக் கோப்புகள் புதிதாக அமைக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு சாட்டப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கோப்புகள் சம்பந்தமாக எவ்வித விசாரணைகளும் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவுசெய்யப்படவில்லை என்பதையும்;

(iii) இதன் காரணமாக அரசாங்கத்திற்கு அண்ணளவாக ரூபா 800 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது எள்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2491/ '12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பஹ்ரேனில் சேவை செய்த, அக்மீமன, ஹியாரே, நுகேகந்த பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளுக்குத் தாயான திருமதி மாதுகெட்ட கமகே தர்மவதீ, இவர் வேலை செய்த வீட்டின் எஜமானிப் பெண் பலவந்தமாக கம்பிக் கொக்கிகளை விழுங்கச் செய்ததன் காரணமாக கடுமையாக நோய்வாய்ப்பட்ட நிலையில் தற்போது இலங்கைக்கு வரவழைக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சின் கீழ் இயங்குகின்ற "சஹன் பியஸ" காப்புறுதி திட்டதிதின் கீழ் இவர் உரித்துரிமைத் தொகையொன்றை கோரியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) சஹன் பியஸ காப்புறுதித் திட்டத்தின் கீழ் திருமதி தர்மவதீக்கு உரித்துரிமைத் தொகையொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2612/ '12

கௌரவ ஆர்.எம். ரஞ்ஜித் மத்தும பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஊவா கல்வியியற் கல்லூரியில் கடந்த காலத்தில் உடற் கல்வி கற்கை நெறிக்காக வருடாந்தம் 120 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(ii) நிதி குறைப்பு காரணமாக மேற்படி கல்வியியற் கல்லூரிக்கு 2012ஆம் ஆண்டில் 60 மாணவர்கள் மாத்திரமே இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நாடெங்கிலுமுள்ள ஒட்டுமொத்த பாடசாலைக் கட்டமைப்பில் உடற் கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன என்பதையும்;

(ii) 2012ஆம் ஆண்டில் ஊவா கல்வியியற் கல்லூரிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உடற் கல்வி கற்கைக்கான மாணவர்களின் எண்ணிக்கை அரைவாசியாக குறைக்கப்பட்டதன் காரணமாக மேற்கூறிய வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் இலக்கினை அடைய முடியாது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) உடற் கல்வி கற்கை நெறியைப் பயில்வதற்கான தகைமைகளைக் கொண்டுள்ள ஊவா மாகாணம் உட்பட நாடெங்கிலுமுள்ள மாணவர்களுக்கு மேற்படி நிலைமை காரணமாக இந்த ஆண்டில் ஏற்பட்ட அநீதியை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2996/ '12

கௌரவ ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அரசாங்க சேவையில் உள்ள முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இதில் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அமைய தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பல்வேறு அரச நிறுவனங்களிலும் கடமையின் பொருட்டு ஒழுங்கான வேலைத்திட்டமொன்று இன்றி பட்டதாரிகள் இணைக்கப்படுவதன் காரணமாக முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் சிக்கலொன்று உருவாகியுள்ளதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி சிக்கலைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2012 நவெம்பர் 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1647/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கொட்டந்தீவு கிராமிய வைத்தியசாலை திறக்கப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை எந்தவொரு நோயாளியும் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படவில்லையென்பதையும்;

(ii) வைத்தியசாலை திறக்கப்பட்ட போதிலும் பௌதீக வளமும் மனித வளமும் உரிய வகையில் பெற்றுக்கொடுக்கப்படாமையால் இந்நிலை தோன்றியுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனின், இப்பிரதேச மக்களின் சுகாதார தேவைகளை நிறைவேற்றுவதற்காக வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலவரையறை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2300/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) தற்போது கல்வி அமைச்சுடன் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவை;

(ii) கடந்த பத்து வருட காலப் பகுதியில் பெருந்தோட்டம் மற்றும் வட கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பல்வேறுபட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் கல்வி அமைச்சுடன் இணைந்து பல்வேறுபட்ட கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் நிறைவேற்றிய செயற்பாடுகள் வெவ்வேறாக யாவை;

(iii) குறிப்பிட்ட வேலைத்திட்டங்களின் கீழ் கடந்த பத்து வருட காலப் பகுதியில் அந்தந்த நிறுவனத்தினால் கல்வி அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்ற நிதிசார்ந்த மற்றும் பொருட்கள்சார்ந்த நன்கொடைகளின் பெறுமதி வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2525/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆம் திகதியளவில்,

(i) மாகாண சபைகளின் நிருவாகத்தின் கீழ் காணப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) குறித்த பாடசாலைகளில் காணப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஏற்ப வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஒவ்வொரு மாகாண சபையினதும் கல்வி அமைச்சினூடாக அந்த மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்கென 2012ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகைகள் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச் சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2851/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி அடையாள அட்டையின் பின்புறத்தில் சுகாதார சேவைகள், வங்கிச் சேவைகள், பொலிஸ் மற்றும் சட்ட ஆலோசனைகள் , தபால், ஓய்வூதியம் மற்றும் அலுவலக நடவடிக்கைகள் போன்ற சேவைகளின்போது அடையாள அட்டையின் உரிமையாளருக்கு முன்னுரிமையளிக்கப்படுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி முன்னுரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்காக,

(i) அரசாங்கத்தினால் ஆக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஆகக் குறைந்தது அரசாங்க ஆஸ்பத்திரியொன்றின் மருத்துவர்களை சந்தித்தல், சிகிச்சை பெறுவதற்கு சமுகமளித்தல் மற்றும் மருந்துகளை பெற்றுக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளின்போது மூத்த பிரஜைகளுக்கு முன்னுரிமையளிப்பதற்காக சட்ட அதிகாரம் வழங்கப்படுகின்ற சுற்றறிக்கையொன்றை மற்றும்/அல்லது ஒழுங்கு விதியொன்றை கூடிய விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2012 நவெம்பர் 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2110/ '11

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள வர்த்தக வங்கிகளில் ஊழியர் சேமலாப நிதியம் வைப்பிலிட்டுள்ள பங்குகளின் பெறுமதியை வங்கி வாரியாகவும்;

(ii) பங்குகளின் ஒவ்வொரு தொகுதியையும் கொள்வனவு செய்த திகதிகளை கம்பனி வாரியாகவும்;

(iii) அத்தகைய பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதை கம்பனி வாரியாகவும்;

(iv) பங்கின் ஒவ்வொரு தொகுதியையும் கொள்வனவு செய்த பெறுமதியையும்;

(v) இத்தகைய ஏதாவது பங்குகள் பின்னர் விற்கப்பட்டிருப்பின், அவைகள் விற்கப்பட்ட விலையையும் அவை யாருக்கு விற்கப்பட்டன என்பதையும்;

(vi) பங்குகள் வைப்புச் செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வங்கியினதும் பணிப்பாளர்கள் சபைகளுக்கு அரசாங்கத்தின் மற்றும் / அல்லது ஊழியர் சேமலாப நிதியத்தின் பெயர் நியமனம் செய்யப்பட்டவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் கல்வித்தகைமைகளையும்

அவர் இச்சபைக்குத் தனித்தனியாகத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2346/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்களை பதிவுசெய்ய வேண்டிய நிறுவனம் யாதென்பதையும்;

(ii) 2000, 2005 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை, இவற்றிற்குரிய சிறுவர்களின் எண்ணிக்கை, நிருவாகிகளின் எண்ணிக்கை, மற்றும் உதவியாளர்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2548/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009இலிருந்து இற்றைவரை இலங்கைப் பொலீசுக்குக் கிடைத்துள்ள வன்புணர்ச்சி, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளில் தற்போது விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3004/ ' 12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரபல்யத் தன்மையின் ஒழுங்கில் எந்த வருமான பெறுமதியைக் கொண்ட முத்திரைகள் தபால் நோக்கங்கங்களுக்காக மிகவும் பிபல்யமானவைகள் என்பதையும்;

(ii) ரூபா 5 பெறுமதியான முத்திரை வழக்கமாக 2செ.மீ. X 2.5 செ.மீ. கொண்டதா என்பதையும்;

(iii) கப்பல் தரகர் நிறுவனத்தின் 25 வருட பூர்த்தியை கொண்டாட அச்சிடப்பட்ட ரூபா 5 பெறுமதியான முத்திரையின் அளவுகளையும்;

(iv) பேராதனையிலுள்ள தொங்குபாலம் மற்றும் மஹகந்தராவையில் அமைந்துள்ள புராதன கற்பாலம் ஆகியவை அச்சிடப்பட்டுள்ள ரூபா 10.00 பெறுமதியான இரண்டு முத்திரைகளின் அளவுகளையும்;

(v) மேலே (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்படும் ஒவ்வொரு முத்திரைக்குமான காகிதம், அச்சிடல், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் இதர செலவுகள் உள்ளிட்ட மொத்தச் செலவையும்; மற்றும்

(vi) மேலே (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு முத்திரையினதும் செலவுகளுடன் வழக்கமான 2செ.மீ. X 2.5 செ.மீ. அளவிலான ரூபா 5.00 பெறுமதியான முத்திரையின் செலவின் ஒப்பீட்டையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2012 நவெம்பர் 22, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2291/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிருவகிக்கப்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களின் பதவிகளை மாற்றியமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழுள்ள முன்பள்ளிகளின் நிருவாகம் வேறு நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவ்வாறு நிருவாகம் மாற்றப்பட்டுள்ள முன்பள்ளிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் டீஎம்எஸ்/டீ3/97/27/02 கடிதத்தின் மூலம் புதிதாக முன்பள்ளி ஆசிரியர் பதவிகளை அங்கீகரிக்காதிருப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானமானது, உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிருவகிக்கப்படுகின்ற முன்பள்ளிகள் மூடப்படுவதற்கு காரணமாக அமையும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2884/ '12

கௌரவ வசந்த அளுவிகாரே,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவுச் சங்கங்களின் நிதி, நிருவாக தத்துவங்கள் தேர்தலினால் நியமிக்கப்படும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப்படுவதனால் குறித்த சங்கங்களின் நிதி, நிருவாக நடவடிக்கைகளில் ஊழல் மற்றும் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்பதையும்;

(ii) இத்தகைய நிலைமையில், மாத்தளை, ரத்தோட்டை கூட்டுறவுச் சங்கத்தின் நிதி நிருவாகத்தில் இடம்பெற்றுள்ள பாரதூரமான மோசடி மற்றும் ஊழல் காரணமாக குறித்த சங்கமானது பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது என்பதையும்;

(iii) நிதி நெருக்கடி காரணமாக கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மற்றும் 'கோப்சிட்டி' நடத்திச் செல்ல முடியாத நிலையில் உள்ள குறித்த கூட்டுறவுச் சங்கத்தின் நுகர்வோர் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாகியுள்ளார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ரத்தோட்டை கூட்டுறவுச் சங்கத்தின்,

(i) கூட்டுறவு விற்பனை நிலையங்கள், 'கோப்சிட்டி', தற்போது இயங்கும் நிலையில் உள்ள கூட்டுறவு விற்பனை நிலையங்கள் அல்லது 'கோப்சிட்டி' மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை;

(ii) கூட்டுறவு விற்பனை நிலையங்களிலிருந்து தேர்தலில் கலந்து கொள்ள வேண்டிய பொதுச்சபை பிரதிநிதிகளின் எண்ணிக்கை மற்றும் 2010.03.20 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் கலந்து கொண்ட மேற்குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை

யாதென்பதை அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) (i) கூட்டுறவுச் சங்கங்களில் இடம்பெறும் நிர்வாக குறைபாடுகள், ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) ரத்தோட்டை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றுள்ள மோசடியான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2916/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டின் போது மூத்த பிரஜைகள் எதிர்நோக்கும் சிரமங்களைத் தடுப்பதற்காக ஓய்வூதியம் வீட்டிற்கே புதிய திட்டமொன்றை அமுலாக்குவதாக வாக்குறுதியொன்று 2010 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட "மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கு" கொள்கைப் பிரகடனம் மூலமாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாக்குறுதியின் பிரகாரம் அமுலாக்கப்படுகின்ற ஓய்வூதியம் வீட்டிற்கே கிடைக்கின்ற புதிய திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வாக்குறுதி இற்றைவரை நிறைவேற்றப்பட்டிராவிடின், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2954/ '12

கௌரவ அக்கில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஐக்கிய தாதியர் சங்கம் தனது 15 கோரிக்கைகள் தொடர்பாக சுகாதார அதிகாரிகளுடன் பல கலந்துரையாடல்களை நடாத்தியுள்ள போதிலும் இதுவரை இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட கலந்துரையாடல்களின் போது ஐக்கிய தாதியர் சங்கம் முன்வைத்த கோரிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அவற்றில் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள கோரிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) சுகாதாரத் துறையை மேலும் வலுவூட்டுவதற்காக மேற்படி தாதியர் சங்கம் முன்வைத்த அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றிக் கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 நவெம்பர் 23, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2830/ '12

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் மருத்துவ கையுறைகளின் வழங்குநர்களைத் தெரிவுசெய்யும் முறை யாதென்பதையும்;

(ii) மருத்துவக் கையுறைகளைக் கொள்வனவு செய்யத் தீர்மானம் மேற்கொள்ளும் நபர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iii) வழங்கல் திகதி, வழங்கல் காலப்பகுதி மற்றும் ஒப்புக்கொண்ட காலத்தினுள் வழங்க முடியாமை என்பன தொடர்பாக வழங்கல் ஒப்பந்தத்திலுள்ள நியம வாசகங்கள் யாவையென்பதையும்;

(iv) 2008, 2009, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மருத்துவக் கையுறைகளின் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்ட தொகைகள் மற்றும் செலவு செய்யப்பட்ட தொகைகள் போன்றன தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முதற்கட்ட விசாரணையில் கையுறைகளின் கொள்வனவு தொடர்பாக முறைகேடொன்று வெளிக்கொணரப்பட்டுள்ளது என்பதையும்

(ii) இம்முறைகேடு மேலதிக விசாரணைக்காக நிதி அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட முறைகேட்டின் தன்மை யாதென்பதையும்;

(ii) முறைகேட்டினால் ஏற்பட்ட பண நஷ்டத்தையும்;

(iii) விசாரணையானது ஆ(ii) இன் படி நடைபெற்றிருப்பின், அதன் விளைவுகளையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2917/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பில் இலங்கையில் அமுலிலுள்ள நடைமுறைச் சட்டமொன்று கிடையாதென்பதையும்;

(ii) இலங்கையினுள் நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக நடைமுறைச் சட்டமொன்று விதக்கப்படல் வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவினால் "ரொனீ பர்னாந்து" வழக்கில் விதப்புரை செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பான நடைமுறைச்சட்டமூலம் ஒன்று இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு நீதி அமைச்சரிடம் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையினுள் நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக நடைமுறைச்சட்டமொன்று விரைவிலேயே விதிக்கப்படல் வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாராவென்பதையும்;

(ii) ஆமெனில், அதனோடு தொடர்புடைய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2955/ ' 12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2012 ஆகஸ்ட் 06ஆம் திகதி நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையின் இணைந்த கணிதம் வினாத்தாளிலிருந்த பிழைகள் காரணமாக இவ்வினாத்தாளுக்கு விடையளிக்கையில் மாணவர்கள் பெரிதும் அசௌகரியத்திற்கு உள்ளானார்கள் என்பதையும்;

(ii) இவ்வினாத்தாளிலிருந்த தவறுகளுடனான வினாக்களுக்கு பதிலளிக்க முயற்சித்தமையினால் உரிய முறையில் நேரத்தை முகாமைத்துவம் செய்ய முடியாது போனமையால் இந்த மொத்த வினாத்தாளுக்கும் மாணவர்கள் கடும் அழுத்தத்திற்கு மத்தியில் பதிலளித்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள்களை மாணவர்களுக்கு வழங்குவதற்கு முன்னர் மீண்டும் சரிபார்க்கப்படுவதில்லையா என்பதையும்;

(ii) 2012 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இணைந்த கணிதப் பாடத்திற்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) உரிய அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக அசௌகரியத்திற்குள்ளான குறிப்பிட்ட பரீட்சையில் கணிதத் துறையில் தோற்றிய மாணவர்களுக்கு நியாயம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3000/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 யூன் 23ஆம் திகதி நடைபெற்ற தரமற்ற டீசல் இறக்குமதிச் சம்பவம் தொடர்பாக விசாரிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் இவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) தரமற்ற டீசல் இறக்குமதி செய்து விநியோகிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள சேதம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அது எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்டவாறு இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற டீசல் பயன்பாட்டினால் பாதிப்புற்ற வாகனங்கள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) இம்முறைப்பாடுகளின் படி பாதிப்படைந்துள்ள அரச நிறுவனங்களுக்குரிய வாகனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிறுவன அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இவ்வாகனங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் காரணமாக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஏற்பட்டுள்ள நிதி ரீதியிலான நட்டம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) தரமற்ற டீசல் பயன்பாட்டினால் பாதிப்புற்ற தனியார் பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இந்த பஸ் வண்டிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளின் நிதி ரீதியிலான பெறுமதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

---

## 2012 நவெம்பர் 24, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2832/ '12

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைச் சனத்தொகையில் வலது குறைந்தோரின் வீதம் என்னவென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை, ஐக்கிய நாடுகளின் “வலது குறைந்தோரின் உரிமைகள்” சாசனத்தில் 2007ஆம் ஆண்டு கைச்சாத்திட்டதா என்பதையும் ;

(ii) இலங்கை அரசாங்கத்தினால் மேலே சொல்லப்பட்ட சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், மேலே சொல்லப்பட்ட சாசனத்தை ஏற்றுக் கொள்ளாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) 2006ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட “வலது குறைந்தோர் உரிமைகள்” சட்டமூலம் ஏன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதையும்;

(v) குறிப்பிட்ட சாசனத்தை செயற்படுத்தும் பொருட்டு அமுல்படுத்தப்பட்ட உள்நாட்டுச் சட்டம் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2919/ '12

கௌரவ அஜித் பீ. பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1977.02.14ஆம் திகதி தொடக்கம் 2009.05.19ஆம் திகதி வரை இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் சேவையிலீடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் தாய் மற்றும் தகப்பனுக்கு ரூபா. 750/- மாதாந்தம் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இத்திட்டத்தின் கீழ் மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படும் தாய்மார்களினதும் தகப்பன்மார்களினதும் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்ட கொடுப்பனவுக்குத் தேவையான பணத்தொகையை அரசு ஏற்கின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், இப்பணத்தொகையை பெற்றுக்கொள்ளும் வழிமுறை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) படைவீரர்களின் பெற்றோருக்கு ரூபா 750/- மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படுதல் போதுமானதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இது போதுமானதென்பதை உறுதிப்படுத்த அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அளவுகோல் யாதென்பதையும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2956/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிகழ்காலத்திற்குப் பொருத்தமான விதத்தில் மருத்துவ விஞ்ஞானத்தின் பொருட்டு புதிய பாடத் துறைகளை சேர்ப்பதற்குப் பதிலாக தற்போது காணப்படுகின்ற மருத்துவ விஞ்ஞான பாடத்திட்டத்தின் சில பகுதிகளை அகற்றிவிட்டு அவற்றுக்கான ஏற்பாடுகள் குறைக்கப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) இலங்கை மருத்துவ சபை குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் மேற்படி நிலைமையின் கீழ் சம்பந்தப்பட்ட பாடத் திட்டத்திலிருந்து சத்திர சிகிச்சை மருத்துவத்துறை அகற்றப்பட்டு வருகின்றதென்பதையும்;

(iii) அதன் மூலம் தரம்மிக்க மருத்துத் துறையொன்றை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சிக்கலான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மருத்துவ பட்டத்திற்காக விதந்துரைக்கப்பட்டுள்ள பாடங்கள் யாவையென்பதையும்;

(ii) மருத்துவ பட்டத்திற்கான பாடத் திட்டத்திலிருந்து சத்திர சிகிச்சை மருத்துவத்துறை அகற்றப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) தரம்மிக்க மருத்துவரொருவரை உருவாக்குவதற்காக சத்திர சிகிச்சை மருத்துவம் சார்ந்த அறிவானது பேருதவியாக இருக்காதா என்பதையும்;

(iv) சத்திர சிகிச்சை மருத்து பாடத்துறையை மருத்துவ பட்டத்திலிருந்து அகற்றாது முழு அளவில் மேற்படி பட்டப்படிப்பு விடயப்பரப்பினுள் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3006/ ' 12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நட்டாண்டு அரசிறை நிலைமை பற்றிய அறிக்கையின் நோக்கம் அதன் அரசிறை மூலோபாயக் கூற்றில் குறிப்பிடப்பட்டவாறு அரசிறை மூலோபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு பொதுமக்களை இயலச் செய்வதாகும் என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட வருடத்தின் முதல் நான்கு மாதங்களுக்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மைத் தொகைகளின் ஒரு கூற்று செலவினம், வருமானம் காசுப்பாய்ச்சல், கடன்பெறுகைகள் ஆகியவை தொடர்பான செலால்லப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 2012 ஜுன் 29ஆம் திகதிய 2012 ஆம் ஆண்டுக்கான நட்டாண்டு அரசிறை நிலைமை பற்றிய அறிக்கை 2012 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்குமான

(i) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மைச் செலவினத்தையும்;

(ii) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை வருமானத்தையும்;

(iii) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மைக் காசுப்பாய்ச்சலையும்;

(iv) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை கடன் பெறுகைகளையும்

உள்ளடக்கியதா என அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 நவெம்பர் 26, திங்கட்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2833/ '12

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கி வருடாந்த அறிக்கையின் நிதிச்சபை மதியுரைக் கணக்காய்வுக் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நியுயோக்கிலுள்ள கட்டிடம் எப்போது கொள்வனவு செய்யப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி கொள்வனவுக்கு அதிகாரமளித்த நபரையும் மற்றும் கொள்வனவு செய்தமைக்கான நோக்கம் யாதென்பதையும்;

(iii) கட்டிடத்தின் முகவரி, மாடிகளின் எண்ணிக்கை, தளப்பிரதேசம் மற்றும் கொள்வனவினால் ஏற்பட்ட செலவு போன்றன யாவையென்பதையும்;

(iv) இது ஒரு கூட்டு முயற்சியா அல்லது தனி முதலீடா என்பதையும்;

(v) இது ஒரு கூட்டு முயற்சியெனில், இதனோடு தொடர்புடைய தரப்புகளின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு தரப்பிற்கும் சொந்தமான வீதம் போன்றன யாவையென்பதை தனித்தனியாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இக்கட்டிடம் யாரின் பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) குறிப்பிட்ட கட்டிடம் தற்போது விற்பனை செய்யப்பட்டுள்ளதா அல்லது வாடகைக்கு விடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) விற்பனை செய்யப்பட்டதெனில், அதனைக் கொள்வனவு செய்தவரின் பெயர், விலை, விற்பனை செய்யப்பட்ட திகதி போன்ற விபரங்கள் யாவையென்பதையும்;

(iv) அது வாடகைக்கு விடப்பட்டதெனில், வாடகைக்குப் பெற்றவர்களின் பெயர்கள், வாடகை, குத்தகைக் காலம் போன்ற விபரங்கள் யாவையென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2383/ '12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) அனுப்பல் கட்டளை விடுக்கப்பட்டிருந்த மருந்துப் பொருட்கள் கிடைக்கும் வரை மருந்துப்பொருட்கள் வழங்கலில் காணப்படுகின்ற பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப் பொருட்களுக்களின் கொடுப்பனவுக்காக ரூபா 500 மில்லியன் குறைநிரப்பு மதிப்பீடொன்று 2011ஆம் ஆண்டில் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததை அவர் அறிவாரா?

(ஆ) (i) சுகாதார அமைச்சிடம் 2011ஆம் ஆண்டின் மருந்துப் பொருட்கள் தேவைப்பாடு தொடர்பிலான ஒரு மதிப்பீடு காணப்படவில்லையா;

(ii) அனுப்பல் கட்டளை தாமதமானதால் மேற்குறிப்பிடப்பட்ட வருடத்தில் உள்நாட்டுச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்ய வேண்டி நேரிட்ட மருந்துப் பொருட்கள் யாவை;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட மருந்துப் பொருட்களின் அனுப்பல் கட்டளைகள் தாமதமடைந்தமைக்கான காரணங்கள் யாவை;

(iv) உள்நாட்டுச் சந்தையில் மேற்குறிப்பிடப்பட்ட மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்கையில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் யாவை;

(v) உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துப் பொருட்களின் வகை, அளவு மற்றும் கொள்வனவு செய்த நிறுவனம் என்பவற்றை வெவ்வேறாகவும்

இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

2957/12

கௌரவ அகில விராஜ் காரியவஸம்,—தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 1982 ஆம் ஆண்டில் இருந்தே வெளிநாடுகளுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளக் கூடியவாறான முன்னேற்றகரமான தொடர்பாடல் முறைமையொன்றைக் கொண்டிருந்த புலத்சிங்கள பிரதான தபால் அலுவலகம் தற்போது மிகவும் சீர்குலைந்துள்ளதென்பதையும்;

(ii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து இற்றை வரை மேற்படி அலுவலகத்தில் எவ்விதமான மறுசீரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) தற்போது அங்கே 11 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதான தபால் அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற உப தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரதான தபால் அலுவலகத்திலும் மேலே குறிப்பிடப்பட்ட உப தபால் அலுவலகங்களிலும் கடமையாற்றுகின்ற மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பிரதான தபால் அலுவகத்திலிருந்து மாத்திரம் சேவையைப் பெறுகின்ற சேவைபெறுனர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) புலத்சிங்கள பிரதான தபால் அலுவலகத்தை மறுசீரமைப்பதற்கும்;

(ii) அதில் நிலவுகின்ற குறைபாடுகளைப் பற்றி ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3007/ '12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குறித்த வருடமொன்றிற்கான நட்டாண்டு அரசிறை நிலைமை பற்றிய அறிக்கை மதிப்பிடப்பட்ட வருமானம் அல்லது காசுப்பாய்ச்சலில் உள்ள பற்றாக்குறை, அல்லது மதிப்பிடப்பட்ட செலவினம் அல்லது கடன் பெறுகைகளில் உள்ள மிகை ஆகியவற்றுக்கான் காரணங்களைக் குறிப்பிடுவது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்கான நட்டாண்டு அரசிறை நிலைமை பற்றிய அறிக்கை தொடர்பாக,

(i) மதிப்பிடப்பட்ட வருமானத்தில் அல்லது காசுப்பாய்ச்சலில் பற்றாக்குறைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அத்தகைய வித்தியாசங்களுக்கான காரணங்கள் தரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மதிப்பிடப்பட்ட செலவினத்தில் அல்லது கடன் பெறுகையில் மிகை உள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனில் அத்தகைய வித்தியாசங்களுக்கான காரணங்கள் தரப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் கூறுவரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2012 நவெம்பர் 28, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2870/ '12

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுழைவுத் தேவைப்பாடொன்றாக கலைகள் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட நுண்ணறிவுப் பரீட்சை முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட நுண்ணறிவுப் பரீட்சையை முடிவுறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், பல்கலைக்கழக அதிகாரிகளுடன் ஏதாவது கலந்துரையாடல்கள் நடைபெற்றனவா என்பதையும்;

(iii) இல்லையெனில், அத்தகைய கலந்துரையாடல்களை மேற்கொள்ளாமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(iv) அவ்வாறெனில், நுழைவுத் தேவைப்பாடாதிய நுண்ணறிவுப் பரீட்சையை முடிவுறுத்துவது தொடர்பில் பல்கலைக்கழக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாடு என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தம்முடன் நல்லுறவைப் பேணும் பரீட்சார்த்திகளுக்கு விரிவுரையாளர்கள் சலுகை காட்டுகின்றனர் என்ற அடிப்படையில் நுண்ணறிவுப் பரீட்சை துஷ்பிரயோகமிக்கது என பரீட்சார்த்திகளிடமிருந்து மனுக்கள் அமைச்சிற்கோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கோ கிடைக்கப் பெற்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், இது தொடர்பில் புலனாய்வோ அல்லது விசாரணையோ ஏன் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கு அமைச்சு முயன்றுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2958/ '12

கௌரவ அகில விராஜ் காரியவஸம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் குருணாகல் போதனா வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சைக் கூறொன்றுக்காக 6 மாடிகளைக் கொண்ட கட்டடமொன்று அமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இது வரை மேற்படி கட்டடத்தில் சத்திர சிகிச்சை கூடமொன்றை அமைத்து சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்கின்ற அரச ஆஸ்பத்திகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆஸ்பத்திரிகளில் வருடாந்தம் மேற்கொள்கின்ற இருதய சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இருதய சத்திர சிகிச்சைகளை செய்து கொள்கின்ற எதிர்பார்ப்புடன் தற்போது அரசாங்க ஆஸ்பத்திரிகளின் காத்திருப்போர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) குருணாகல் போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி கட்டடத்தில் சத்திர சிகிச்சை கூடமொன்றை அமைப்பதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கும்;

(ii) அதற்குத் தேவைப்படும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருந்துகளை பெற்றுக் கொடுப்பதற்கும்

துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3031/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கடற்றொழில், நீரியல் வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த மொறட்டுவை - முகத்துவாரம் மீன்பிடித்துறைமுகத்தை மீள நிர்மாணிப்பதற்காக நிதியுதவி வழங்கிய நாடு எது என்பதையும்;

(ii) உதவியாகக் கிடைத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்கூறிய மீன்பிடித் துறைமுகத்தின் மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி எது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மொறட்டுவை முகத்துவாரம் அலை தாங்கியின் நீளம் மற்றும் அகலம் எத்தனை மீற்றர் என்பதையும்;

(ii) அலை தாங்கியின் வளைவு எத்தனை மீற்றர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

3076/ '12

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை மாவட்டத்திலுள்ள புல்மோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர்களும் பாடசாலை மாணவர்களும் அப்பிரதேசத்தில் ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத காரணத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் விளையாட்டில் அவர்களின் திறன்களை முன்னேற்றிக் கொள்வதற்கு பூரண வசதிகளுடனான ஒரு விளையாட்டு மைதானத்தை வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2012 நவெம்பர் 29, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2959/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுரம் கல்வி வலயத்தில் 2012 ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மாதிரி வினாத்தாள்களில் பெருமளவிலான பிழைகள் இருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சம்பந்தப்பட்ட வினாத்தாள்களை மாணவர்களுக்கு வழங்குவதற்கு முன்னர் அவற்றில் காணப்பட்ட தவறுகளை திருத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அண்மித்திருந்ததொரு சந்தர்ப்பத்தில் பிழைகளுடன் கூடிய மாதிரி வினாத்தாள்களை மாணவர்களுக்கு வழங்கியதன் மூலம் ஏற்பட்ட தீங்கிற்கு பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினர்கள் யாவரென்பதையும்;

(iii) மேற்கூறப்பட்டவாறான சிக்கலான நிலைமைகள் மீண்டும் ஏற்படாத வண்ணம், பொறுப்புடன் கருமமாற்றக்கூடிய உத்தியோகத்தர்களை சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3032/ '12

கௌரவ ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 'எகாவா' எனும் மூலிகைத் தாவரத்தின் பதிலீட்டுத் தாவரமாகப் பயன்படுத்தப்படுகின்றதும் இலங்கைக்கே உரித்தான மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளதும் உலகத்தில் அழிவுற்று வருகின்றதுமான தாவர இனத்திற்குச் சொந்தமான 'வல்லாபட்டா" (Gyrinops walla) தாவரத்தின் வெட்டுமரத் துண்டுகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் கள்ளக்கடத்தல் பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) ஏற்றுமதிக்கு தயார் செய்யப்பட்ட நிலையில் கலவான வெம்மியகொட (சிங்கராஜ வனத்திற்கு அருகாமையிலுள்ள) பிரதேசத்தில் எத்தனை கிலோ கிறாம் 'வல்லாபட்டா' தடிகள் கைப்பற்றப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி ஒரு கிலோ கிறாம் வெட்டுமரத் துண்டுக்கு கள்ளக்கடத்தல்காரர்கள் செலுத்தியுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iii) உலக சந்தையில் ஒரு கிலோ கிறாம் "வல்லாபட்டா" எத்தனை ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) "வல்லாபட்டா" வெட்டுமரக் கள்ளக்கடத்திலின் பின்னணியிலுள்ள கள்ளக்கடத்தல்காரர்கள் யாவர் என்பதையும்;

(v) குறித்த கள்ளக்கடத்தல்காரர்கள் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(vi) இவர்களுக்கு வழங்கப்படவுள்ள தண்டனை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) "வல்லாபட்டா" எனப்படும் மூலிகைத் தாவரத்தைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3093/ '12

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள திருகோணமலை மாவட்டத்தின் குச்சவேளி பிரதேச சபை ஆளுகைப் பிரேதேசத்திற்கு உட்பட்ட தென்னமரவாடி தமிழ் கிராமத்தில் சுமார் 70 குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களுக்கு கல்வி பயில்வதற்கான பாடசாலையொன்று இல்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கிராமத்தைச் சேர்ந்த சிறார்களுக்கு கல்வி கற்பதற்கான அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுத்தல் கல்வி அமைச்சின் பொறுப்பாகுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், தென்னமரவாடி கிராமத்தின் சிறார்களுக்கு கல்வி கற்கக்கூடிய வகையில் ஆரம்பப் பாடசாலையொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3094/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996- 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் இடம்பெற்ற மோசடிகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமையின் காரணமாக கணக்காய்வுப் பரிசோதகர் ஜயவர்த்தன என்பவர் மோசடிச் செயலொன்றை மேற்கொண்டுள்ளாரா என்பது பற்றி முறையானதொரு விசாரணையை நடாத்துமாறு பொலிஸ் திணைக்களத்தின், கொழும்பு மோசடிப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கணக்காய்வுப் பரிசோதகர் இலஞ்சம் பெற்றுள்ளாரா என்பதை உறுதி செய்து கொள்வதற்கான விசாரணையொன்றை நடாத்துமாறு இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரணைசெய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர் தொழில்வாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கு சம்பளமற்ற லீவு அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) முறையான குழுவொன்றினால் நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் சிபார்சுகளை அமுல்படுத்தாது, மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இவருக்கு லீவு அங்கீகரிக்கப்பட்டுள்ளமை சட்டவிரோதமானது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2012 நவெம்பர் 30, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2109/ '11

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) (i) கலதாரி ஹோட்டல் லங்கா பிஎல்சி, லாப்ஸ்கேஸ் (Laugh Gas) பிஎல்சி மற்றும் சிலோன் கிரைன் எலிவேடர்ஸ் (Ceylon Grain Elevators) ஆகியவற்றில் ஊழியர் சேமலாப நிதியம் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) பங்குகளின் தொகுதி ஒவ்வொன்றும் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பங்குகள் கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்;

(iv) பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்;

(v) பங்குகள் பின்னர் விற்பனை செய்யப்பட்டிருப்பின், விற்கப்பட்ட நபர்களின் பெயர்களை பங்குத் தொகுதி அடிப்படையிலும்;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட பங்குகளின் ஒவ்வொரு தொகுதியும் விற்கப்பட்ட விலையையும்;

(vii) இக்கொடுக்கல் வாங்கல்களில் சம்பந்தப்பட்ட தரகர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல், என்?

2960/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதி முதல் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு உத்தியோத்தர் ஒருவர் நியமிக்கப்படவில்லையென்பதையும்;

(ii) தற்போது இப்பதவியின் கடமைகள் வனசீவராசிகள், கமநல சேவைகள் அமைச்சின் செயலாளரினாலேயே ஈடுசெய்யப்படுகின்றன என்பதையும்;

(iii) இவர் கடமையாற்றிய காலப்பகுதியில் கட்டளைச்சட்டங்களை மீறும் வகையிலான பல செயல்களில் ஈடுபட்டுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஒரு வருடத்திற்கும் மேலாக வெற்றிடமாகியுள்ள வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு பொருத்தமானதொரு உத்தியோகத்தரை நியமிக்காதிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட கட்டளைச்சட்டங்கள் மீறப்படும் வகையில் செயலாற்றிய அமைச்சின் செயலாளருக்கு எதிராக இற்றைவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) பொருத்தமானதொரு உத்தியோகத்தரை வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3033/ '12

கௌரவ ரோஸி சேனாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நாடு முழுவதிலுமுள்ள இபோச டிப்போக்களில் பாவனைக்கு உதவாத பஸ் வண்டிகளாக தரித்து வைக்கப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பஸ் வண்டிகளில் விற்பனை செய்யப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த பஸ் வண்டிகளை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எதிர்காலத்தில் விற்பனை செய்யப்படவுள்ள இபோச பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த பஸ் வண்டிகளை விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவாரா?

(இ) தரம் குறைந்த டீசல் பாவனையின் காரணமாக 2011 யூலை மாதம் தொடக்கம் இன்றுவரை இபோச இழந்துள்ள வருமானம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3098/ '12

கௌரவ பீ. ஹரிசன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் வண்டல் மண் அகற்றுவதற்காக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள மொத்த வாவிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) பிரதேச செயலாளர் பிரிவுகளின் பிரகாரம் வெவ்வேறாக மேற்படி வாவிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வாவிக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்கு நீர்ப்பாசன மற்றும் கமநல சேவைகள் உத்தியோகத்தர்களின் உதவி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இல்லையெனில், இதற்காக பிறரின் உதவி பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில் இவர்கள் யாவர் என்பதையும்;

(iv) இவர்கள் உரித்தாயுள்ள நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வாவியிலிருந்தும் வண்டல் மண் அகற்றப்பட்டுள்ள ஏக்கர்களின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) வண்டல் மண் அகற்றப்பட்டதன் பின்னர் இரண்டு போகங்களில் பயிரிடுவதற்குப் போதுமான நீரை மேற்படி வாவிகளில் சேகரித்து வைக்கலாமா என்பதையும்;

(vii) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வாவிகளின் வண்டல் மண் வருடம் தோறும் அகற்றப்படுகின்றதா என்பதையும்;

(ii) இல்லையெனில் அது மேற்கொள்ளப்படும் கால வீச்சிடை யாதென்பதையும்;

(iii) இத்தடவை வண்டல் மண் அகற்ற முடியாமற்போன வாவிகளில் குறிப்பிட்ட பணிகள் எதிர்வரும் சிறு போகத்தில் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2012 திசெம்பர் 03, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2961/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் நிதியத்தின் கீழ் ரூபா பதினேழு இலட்சம் செலவில் நிர்மாணிப்பதற்காக, 2003 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட யட்டதொல நீர் வழங்கல் திட்டத்தில் பாதியளவு மாத்திரமே தற்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இந்நிலையின் கீழ் யட்டதொல கனிஷ்ட வித்தியால மாணவர்களின் குடிநீர் தேவைகளை நிறைவு செய்துகொள்ள இயலாதுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) யட்டதொல நீர் வழங்கல் திட்டத்தை பாதியளவு பூர்த்திசெய்தற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) யட்டதொல கிராமவாசிகளினதும் யட்டதொல கனிஷ்ட வித்தியால மாணவர்களினதும் குடிநீர் தேவையினை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3034/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கை போக்குவரத்து சபை வசமுள்ள மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பேருந்துகளில் ஓட்டத்திற்கு தகுதியான பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) ஓட்டத்திற்கு தகுதியற்ற பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) பதினைந்து வருடங்களுக்கு மேலாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) பத்து வருடங்களுக்கு குறைவாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வயர் மற்றும் பெட்டரி இல்லாமையினாலும் வேறு பல்வேறு காரணங்களினாலும் இ.போ.ச பேருந்துகள் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3100/ '12

கௌரவ பீ. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடமத்திய மாகாணத்தில் ஒவ்வொரு மட்டத்திலும்,

(i) அரச பாடசாலைகள்;

(ii) 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தினுள் மூடப்பட்டுள்ள பாடசாலைகள்;

(iii) கடமையாற்றும் ஆசிரியர்கள்;

(iv) காணப்படுகின்ற மொத்த ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(v) ஒவ்வொரு பாடத்திற்கமைய நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள்;

(vi) பதில் கடமையாற்றும் அதிபர்கள்;

(vii) தரங்களையுடைய ஆசிரியர்கள்;

(viii) தொண்டர் ஆசிரியர்கள்

எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வட மத்திய மாகாணத்தில் பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு சம்பளம் செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அந்தச் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்கூறிய மாவட்டங்களில் அரச பாடசாலைகளில் ஆசிரியர்களாக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றார்களா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், அந்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) இவர்களுக்கு கல்வித் திணைக்களத்தின் அல்லது வேறு நிறுவனத்தின் கீழ் ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) எதிர்காலத்தில் இவர்களை ஆசிரியர் சேவையில் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3135/ '12

கௌரவ வசந்த அளுவிகாரே,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தளை நாவுல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள நாலந்த கைத்தொழிற் பேட்டையினுள் தற்போது,

(i) உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை;

(ii) நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை;

(iii) நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை;

எவ்வளவு என்பதை அவா் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட கைத்தொழிற் பேட்டைக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பு;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட கைத்தொழிற் பேட்டையினுள் தொழிற்சாலையொன்றுக்கு வழங்கப்படும் கூடியபட்ச மற்றும் குறைந்தபட்ச நிலப்பரப்பின் அளவு;

(iii) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அளவு தனித்தனியாக;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட காணிகள் வழங்கப்பட்டதன் அடிப்படை;

(v) தற்போது கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தக் காணியின் அளவு மற்றும் எஞ்சியுள்ள காணியின் அளவு;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட கைத்தொழிற் பேட்டையினுள் தொழிற்சாலைகளை ஆரம்பித்துள்ள தொழிற்சாலை உரிமையாளா்களின் பெயா்கள்

யாதென்பதை அவா் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நாலந்த கைத்தொழிற் பேட்டைக்கு உரித்தான நிலத்திலிருந்து தனியார் பாவனைக்காக காணித் துண்டுகளை வழங்குவதற்கான இயலுமை காணப்படுகின்றதா;

(ii) ஆமெனில், இது மேற்கொள்ளப்படும் அடிப்படை யாது;

என்பதை அவா் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2012 திசெம்பர் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2962/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற 70 வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளுக்கு ரூபா 1,000/- மாதாந்தக் கொடுப்பனவொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருப்பதால் இவர்களுக்கு உரித்தான சமுர்த்தி நிவாரணம் இரத்துச் செய்யப்படுவதற்கான ஆயத்தம் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 70 வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கத்தினால் மாதம்தோறும் செலவிடப்படுகின்ற மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட ரூபா 1,000/- கொடுப்பனவு வழங்கப்படுவதன் காரணமாக தற்போது வழங்கப்படுகின்ற சமுர்த்தி நிவாரணத்தை நிறுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ரூபா. 1,000/- கொடுப்பனவு வழங்கப்படுவதன் காரணமாக தற்போது வழங்கப்படுகின்ற சமுர்த்தி நிவாரணத்தை நிறுத்துவதற்குப் பதிலாக அக் கொடுப்பனவுடன் சேர்த்து சமுர்த்தி நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3035/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கம்பஹா புகையிரத நிலையம்,

(i) நிர்மாணிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) நிர்மாணிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரை எத்தனை தடவைகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இறுதியாக மறுசீரமைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கம்பஹா புகையிரத நிலையத்தின்,

(i) கண்டி நோக்கியும் கொழும்பு நோக்கியும் அன்றாடம் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) தினசரி மொத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) மாதாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) மாதாந்த பருவச்சீட்டு வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) மாதாந்த சராசரி பொதிகள் மூலமான வருமானம் எவ்வளவென்பதையும்;

(vi) பிரயாணச்சீட்டு கருமபீடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கம்பஹாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புகையிரத உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி இல்லங்களின் நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3102/ '12

கௌரவ பீ ஹரிசன்,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012ஆம் ஆண்டில் அனுராதபுரம் மாவட்டத்தில் மகாவலிப் பிரதேசங்களில் வரட்சி காரணமாக பயிர்ச்செய்கைகள் சேதத்துக்குள்ளாகிய காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி பயிர்ச்செய்கைக் காணிகளின் உரிமையாளர்களில் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு இழப்பீடாக வழங்கப்பட்ட மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(iv) சேதத்துக்குள்ளாகிய வயற்காணிகளுக்காக விதை நெல் வழங்கப்பட்ட வயற்காணிகளின் பரப்பளவு மற்றும் வழங்கப்பட்ட விதை நெல்லின் அளவு தொகுதிவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) பயிர்ச்செய்கை சேதத்தை முன்னிட்டு ஒரு ஏக்கர் காணிக்காக வழங்கப்பட்ட உழவு இயந்திர வாடகை நிவாரணத் தொகை யாதென்பதையும்;

(vi) இதற்கென செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் மகாவலி எச் வலயத்தில் காணப்படும் கமநல அமைப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கமநல அமைப்புகளில் தற்போது ரூபா ஓரிலட்சம் வீதம் வழங்கப்பட்டுள்ள கமநல அமைப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பணத்தைப் பெறாத கமநல அமைப்புகளுக்கு எதிர்வரும் காலத்தில் மேற்படி பணத்தை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மகாவலி பிரதேசங்களிலுள்ள கிணறுகளை புனரமைப்பதற்காக 2012ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

(ii) ஒரு கிணறுக்கென ஒதுக்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3139/ '12

கௌரவ அப்துல் ஹலீம்,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹாரிஸ்பத்துவ அபிவிருத்தி மன்றம் எனப்படும் நிறுவனத்தினால் 1994 ஆம் ஆண்டில் ஹல்லொலுவ, வராதென்ன மகாவலி ஆற்றின் நடுவே அமைந்துள்ள வரலாற்று ரீதியிலானதொரு இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு பௌத்த பிக்குமாருக்குப் பூஜிக்கப்பட்ட '*உதகுக் கேப சீமாமாலகய*' எனும் தலமானது கண்டீய அமரபுர சங்கப் பிரிவின் உயர்தீட்சையளிக்கின்ற மதச் சடங்குகள் மேற்கொள்ளப்படும் தலமாகும் என்பதையும்;

(ii) தற்போது இங்கிருந்த புனித தலம் நீக்கப்பட்டு மேற்படி இடத்தில் தனியார் மின் உற்பத்தி நிலைமொன்றை நிர்மாணிப்பதற்குத் தேவையான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

(iii) வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மேற்படி புனித தலம் அழிக்கப்படுதல் தொடர்பில் மிகவும் அதிருப்திக்குள்ளாகியிருக்கும் அமரபுர சமயப் பிரிவுக்குரிய நாடுபூராவும் உள்ள அநேகமான பொது மக்களும் பிக்குமாரும் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த தயாராகிவருகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கண்டீய அமரபுர சமயப் பிரிவின் வீழ்ச்சிக்கு ஏதுவான மேற்படி தனியார் மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) வரலாற்றுப் புகழ்மிக்கதும் பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்ததுமான '*உதகுக்கேப சீமாமாலகய*' வில் எதிர்காலத்திலும் தடையின்றி மேற்படி சமயப் பிரிவின் மதச் சடங்குகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2012 திசெம்பர் 05, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1521/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள தொழிற்சார் விமானிகள் பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கையையும்;

(ii) அவ்வாறான நிறுவனங்களின் பெயர்களையும்;

(iii) இலங்கையில் விமானம் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு ஏற்படும் சராசரி செலவினத்தையும்;

(iv) இலங்கைக்கு அவசியமான விமானிகளின் எண்ணிக்கையையயும்;

(v) பயிற்றப்பட்ட, ஆனால் இலங்கையில் விமானியாக சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத எஞ்சிய மாணவர்களின் பின்விளைவையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2963/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் பொதுசன சுகாதாரப் பரிசோதகர், குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தர், ஆய்வுகூட உத்தியோகத்தர், மருந்தாளர், குடும்ப சுகாதார ஆலோசகர் ஆகிய பதவிகளில் உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

(ii) எனவே களுத்துறை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் களுத்துறை சுகாதாரக் கல்வி நிறுவனம் ஆகியவற்றின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற ஆஸ்பத்திரிகளின் சிகிச்சைப் பிரிவுகள், கர்ப்பிணிகள் மற்றும் தாய்மார்களுக்கான சிகிச்சை பிரிவுகள், டெங்கு ஒழிப்புக் கருத்திட்டங்கள் போன்ற சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு விடயங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் தற்போது மேலே குறிப்பிடப்பட்ட சுகாதார சேவை உத்தியோகத்தர் பதவிகளில் நிலவுகின்ற மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் மேற்படி பதவிகளில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3036/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யான் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக உதவி வழங்கிய நாடு யாது;

(ii) இதன் பொருட்டு மேற்படி நாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற உதவித் தொகை எவ்வளவு;

(iii) இதற்காக செலவிடப்படும் பணத்தொகை யாது;

(iv) இதன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் பூர்த்தி செய்யப்படுவதற்கு உத்தேசமாயுள்ள திகதி யாது;

(v) மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக நன்மையடையும் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் நீர்ப்பாசன வசதிகளைப் பெறும் வயற் காணிகளின் பரப்பளவு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3103/ '12

கௌரவ பீ.ஹரிசன்,— காணி,காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம் நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் காணப்படும்,

(i) மக்கள் வசிக்கும் காணித் துண்டுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் அறுதி உறுதிக் காணித் துண்டுகள், குத்தகை காணித் துண்டுகள் மற்றும் அனுமதியற்ற காணித் துண்டுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை காணிபெறுநர்களுக்கு அறுதி உறுதிகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அனுராதபுரம் நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அப்புறப்படுத்தப்படுவார்களா என்பதையும்;

(ii) இன்றேல், இவர்களின் வதிவு அதே இடங்களிலேயே சட்டரீதியாக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து ஆதன வரி அல்லது வேறேதேனும் வரி அறவிடப்படுமா என்பதையும்;

(iv) மின்சார மற்றும் ஏனைய வசதிகளை வழங்கும் போது இவர்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக பரிசோதிக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2012 திசெம்பர் 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2036/ '11

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை கிரிகெட் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்காக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அந்த நிறுவனத்தினால் வருடாந்தம் செலவு செய்யப்பட்டுள்ள தொகை;

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலவு செய்துள்ள தொகை;

(iii) மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளில் இருந்த நாட்களின் எண்ணிக்கை

வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகத்தர்கள் மேற்கூறியவாறு வெளிநாடு சென்றதனால் கிரிகெட் விளையாட்டுத்துறைக்குக் கிடைத்த சாதகமான அல்லது பாதகமான பெறுபேறுகள் யாவை;

(ii) வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களின் பயணச் செலவுகள் தங்குமிடங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் சுற்றுலா விபரக் குறிப்புக்களை சமர்ப்பிப்பாரா;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2211/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்திற்கேற்ப தியவர, தியவர விசிரி, ஜன உதான, கம்உதான போன்ற பல்வேறு பெயர்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள வீடமைப்புக் கடன்களையும் வட்டியையும் பதிவழிப்புச் செய்து மேற்படி வீடுகளின் அறுதி உரிமையை பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு வீடமைப்புத் திட்டத்தின் கீழும் வீடுகளின் அறுதி உரிமையை பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2964/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிக்கவரட்டிய கல்வி வலயத்தில் அமைந்தள்ள 57 பாடசாலைகளுக்கு இதுவரை நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்பட்டு அனுப்பப்படவில்லையென்பதையும்;

(ii) தற்போது இப்பாடசாலைகளில் அதிபர் பதவிகளில் பதிற்கடமையாற்றும் அதிபர்களே கடமை புரிகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நிக்கவரட்டிய கல்வி வலயத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளுக்குத் தேவையான அதிபர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்காதிருந்தமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளில் நிலவுகின்ற அதிபர் வெற்றிடங்களை மிகவும் துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3037/ '12

கௌரவ ரோஸி சேனாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புந்தலை தேசிய வனப்பூங்காவுக்கு சொந்தமான நிலப் பரப்பு எவ்வளவு;

(ii) அதனுள் வசிக்கும் பறவையினங்களின் எண்ணிக்கை யாது;

(iii) அது உயிர் பல்வகைத்தொகுதி ஒதுக்கமாக பெயரிடப்பட்டுள்ளதா;

(iv) அதனுள் சுமார் 15 ஏக்கர் நிலப் பரப்பில் வலைகளை அமைத்து பறவைகளை அடைத்து வைக்கும் ஒரு கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா;

(v) அதனைப் பயன்படுத்தி மேலே குறிப்பிடப்பட்டவாறு ஒரு கருத்திட்டம் ஆரம்பிக்கப்படுமெனில் அத் திகதி யாது;

(vi) அதனுள் ஏறத்தாழ 15 ஏக்கர் நிலப்பரப்பில் வலைகளை அமைப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மின்னேரிய தேசிய வனப்பூங்காவின் கிழக்கு எல்லையில் சுமார் 2.2 ஹெக்டெயார் (4 – 5 ஏக்கர்) வனப் பிரதேசத்தில் ஜீவ்ஸ் ஹைட் அவுட் (Jeew's Hide Out) எனும் பெயரில் உல்லாசப்பிரயாண ஹோட்டலொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி ஹோட்டல்,

(i) நிர்மாணிக்கப்பட்ட திகதி யாது;

(ii) உரிமையாளரின் பெயர் யாது;

(iii) நிர்மாணிப்பதற்காக வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் எழுத்துமூல அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா;

(iv) நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதி யாது;

(v) நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள கடிதத்தை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2012 திசெம்பர் 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1523/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலிய கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் விஸ்தரிக்கப்படவுள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் முதற் தடவையாக எப்போது செயற்படுத்தப்பட்டது என்பதனையும்;

(ii) அது செயற்படுத்தப்பட்டபோதும், தற்பொழுதும் அச்சுத்திகரிப்பு நிலையத்தின் ஆற்றலை தனித்தனியாகவும்

அவர் கூறுவாரா?

(இ) (i) நாட்டில் வேறு ஏதாவது சுத்திகரிப்பு நிலையங்களும் நிர்மாணிக்கப் படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அந்த சுத்திகரிப்பு நிலையங்களின் பெயர்களையும்;

(iii) இவைகளில் ஏதேனும் அரசாங்கத்தால் நிதியீட்டப்படுகிறதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1652/ '11

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனறாகலை மற்றும் பதுளை மாவட்டங்களில் பல வருடங்களாக இடைவிடாது சேவையில் ஈடுபடும் பாடசாலை கல்விசாரா ஊழியர்களின் சேவை இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை என்பதையும்;

(ii) 2005 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்க்கப்பட்ட இவர்கள் இதுவரை சிறியதொரு நாளாந்த சம்பளத்திற்கு சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி நிலைமையின் கீழ் இவர்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கல்விசாரா ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ள நிலையிலும் இவர்களது சேவையை நிரந்தரமாக்காமலிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி காரணங்களை தவிர்த்து இவர்களை நிரந்தர ஊழியர் குழாமில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2966/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சின் கீழுள்ள எல்லாத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் இடர் கடன்களைச் செலுத்துவதற்காக வருடமொன்றுக்கு ரூபா 60 மில்லியன் ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் இதுவரை அதற்காக ரூபா. 5 மில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதனால், சுகாதார சேவையின் சகல உத்தியோகத்தர்களும் தமக்குரிய இடர் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்டகாலம் காத்திருப்போர் பட்டியலில் இருக்கவேண்யுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இதுவரை இடர் கடன் பெற்றுக்கொள்வதற்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ள சுகாதார சேவைக்குரிய ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி இடர் கடனைச் செலுத்துவதற்காக ஒதுக்கப்படவேண்டிய நிலுவைப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) விண்ணப்பித்துள்ள இடர் கடனை துரிதமாக செலுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3038/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கடற்றொழில், நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் பின்னர் புனரமைக்கப்பட்ட மொரட்டுவ – முகத்துவாரம் மீன்பிடி துறைமுகத்திற்குள் பிரவேசிப்பதற்கு முயற்சித்த போது பேரலையில் சிக்கி படகு கவிழ்ந்தமையால் மீனவர்கள் இறந்தார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மொரட்டுவ, முகத்துவாரம் மீன்பிடித் துறைமுக நிர்மாணிப்புகளின் பின்னர் இற்றைவரை மேலே குறிப்பிட்டவாறு இறந்த மீனவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இறந்த மேற்படி மீனவர்களுக்காக நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின் இற்றைவரை செலுத்தப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) இறந்த மீனவரொருவர் சார்பில் மேற்படி குடும்பத்துக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவார?

(இ) மீன்வளம் குன்றிய பருவகாலத்தில் மொரட்டுவ – முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்று திரும்பும் மீன்பிடிப் படகுகள் மேற்படி மீன்பிடித் துறைமுகத்திற்குள் பிரவேசிப்பதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்தை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2012 திசெம்பர் 08, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2065/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அனுராதபுரம் மகா கனதரா குளத்தை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறைகளுக்கமைய வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்த கேள்விப் பத்திரதாரர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) கேள்விப்பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(iv) அந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்களையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மகா கனதரா குளம் புனரமைக்கப்படுகின்ற போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக சனாதிபதி புலனாய்வுப் பிரிவால் கண்டறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் படி அதற்கு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(iii) அச்சந்தர்ப்பத்தில் இவர்கள் வகித்த பதவிகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின் தற்போது இவர்கள் சேவையாற்றும் இடங்கள் யாவையென்பதையும்;

(vi) தற்போது இவர்கள் வகிக்கும் பதவிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2212/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை - இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர மாடி வீடமைப்புத் திட்டங்களில் வசிப்பவர்களுக்கு மேற்படி வீடுகளின் அறுதி உரிமையை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நகர மாடி வீடுகளின் அறுதி உரிமையை அதில் வசிப்பவர்களுக்கு வழங்குதல் எவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(ii) இற்றைவரை மாடி வீடுகளின் அறுதி உரிமையை பெற்றுக்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2967/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தரமற்ற எரிபொருளை வழங்கியமை காரணமாக 2010ஆம் ஆண்டில் கறைநிரலில் சேர்க்கப்பட்ட விமொல் எனப்படும் எரிபொருள் வழங்கும் கம்பனியிடமிருந்து 2012ஆம் ஆண்டின் முதல் 8 மாதங்களில் மீண்டும் எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கம்பனியிடமிருந்து பெறப்பட்ட தரங்குறைந்த டீசல் பாவனை காரணமாக 1000 தனியார் பஸ் வண்டிகளும் 50 இ.போ.ச. பஸ் வண்டிகளும் 10 புகையிரதங்களும் உள்ளிட்ட பெருந்தொகையான வாகனங்கள் செயலற்றுப் போயுள்ளன என்பதையும்;

(iii) இதன் காரணமாக இ.போ.சபைக்கு மாத்திரம் நாளொன்றுக்கு ஏறக்குறைய ரூபா. 10 இலட்சம் நட்டமேற்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கறை நிரலில் சேர்க்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட கம்பனியிடமிருந்து மீண்டும் எண்ணெய் கொள்வனவு செய்ய அங்கீகாரம் வழங்கியவர்கள் யாவர் என்பதையும்;

(ii) அக்கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள டீசலின் அளவு யாதென்பதையும்;

(iii) ஏதேனும் ஒரு கம்பனியிடமிருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்படுகின்றவிடத்து மேற்படி எரிபொருளின் தரம் பரிசீலிக்கப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தரமற்ற டீசல் பாவனை காரணமாக தொழில்நுட்பக் கோளாறுகளுக்கு உள்ளாகிய வாகன உரிமையாளர்களுக்கு நட்டஈட்டுத் தொகையினை வழங்கவும்;

(ii) தரமற்ற டீசல் வழங்கிய கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3039/ '12

கௌரவ ரோஸி சேனாநாயக்க,— கமநலச் சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாதுருஓயா வனப் பூங்காவிற்கு சொந்தமான காணியின் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(ii) இங்குள்ள பெறுமதிமிக்க மரங்கள் யாவை என்பதையும்

(iii) மேற்படி வனப் பூங்காவில் நீரேந்து பகுதிகளை பேணுவதற்கு பைனஸ் மர நடுகைக்குப் பதிலாக நடக்கூடிய வேறு மாற்று பயிரினங்கள் இனம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மாதுருஓயா வனப் பூங்காவினுள் வெட்டுமரக் கள்ளக்கடத்தல்கள் மற்றும் மிருக வேட்டை என்பன இடம்பெறுகின்றன என்பதையும்;

(ii) உண்மையில் இங்கிருந்த யானையை கொலை செய்து தந்தத்தை வெட்டிச் சென்றுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்கூறப்பட்டவாறு வெட்டிச் செல்லப்பட்ட யானைத் தந்தத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சம்பவம் தொடர்பில் கள்ளக்கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) மாதுரு ஓயா வனப் பூங்காவில் இடம்பெறும் வெட்டுமரக் கள்ளக்கடத்தல், மிருக வேட்டை என்பவற்றை தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்கள்

பா.168/ '12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா,— இலங்கை மத்திய வங்கியினால் கிரேக்க முறிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் சம்பந்தமாக சர்வதேச நிதியக் கூட்டிணைப்பு அமைச்சர் கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம அவர்களால் பாராளுமன்றத்தில் செய்யப்பட்ட கூற்று தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

பொறுப்பற்ற உள்நாட்டுப் பொருளாதார முகாமைத்துவத்தினால் தீவிரமடைந்துள்ள உலகளாவிய நிதி நெருக்கடியின் விளைவினால் 2010ஆம் ஆண்டளவில் பல யூரோ வலயப் பொருளாதாரங்கள் நெருக்கடி நிலையினை அடைந்துள்ளதாலும்,

மதிப்பீடுகளை விட கிரேக்க வளர்ச்சி வீதத்தின் வீழ்ச்சி, பாரிய வித்தியாசத்தில் வரி வருமானங்களை விட செலவு அதிகரித்துள்ளதனால் ஏற்படும் அரசிறைச் சமநிலையின்மை, கடன் கட்டுப்பாட்டை மீறிய நிலைக்கு வருதல் ஆகியவற்றுடன் அரசாங்கத்தின் புள்ளிவிபரங்களின் நம்பகத் தன்மை ஏறக்குறைய பூச்சியமாக வீழ்ச்சியடைந்து, குறிப்பாக கிரேக்க அரசாங்கம் அதன் கற்பனையான வரவு செலவுப் பற்றாக்குறைத் தொகையைச் சமர்ப்பித்து ஐரோப்பிய ஒன்றியத்தைத் தொடர்ச்சியாக தவறாக வழிநடத்தியமை ஆகிய காரணங்களினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளுள் ஒன்றாக கிரேக்கம் இருப்பதனாலும்,

2010ஆம் ஆண்டின் முதல் காலாண்டின்போது, அதன் படுகடன் கடப்பாடுகளை ஈடுசெய்யும் கிரேக்க அரசாங்கத்தின் ஆற்றல் பாரதூரமான நிலைமைக்குள்ளாக்கப்பட்டு, இறைமைக் கடனை செலுத்த முடியாதவாறான அச்ச நிலைக்கு வந்துள்ளதாலும்,

தரமிடும் முகவர்களின் கிரேக்க நாட்டுக்கான தனிப்பட்ட கடன் வசதி வெற்று நிலைமைக்கு உள்ளாகி அவர்கள் அதனை "பெறுமதியற்ற" அந்தஸ்துக்கு மதிப்பிறக்கம் செய்துள்ளதாலும்,

வீழ்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் எண்ணத்துடன் மிகக்கடுமையான சிக்கனப் பொதியை நடைமுறைப்படுத்தும் நிபந்தனையுடன் யூரோ வலய நாடுகளினாலும் சர்வதேச நாணய நிதியத்தினாலும் கூட்டாக நிதியிடப்பட்ட 110 பில்லியன் யூரோ விடுவிப்புப் பொதியை வழங்குமாறு 2010ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் கிரேக்க அரசாங்கம் கோரி பெற்றுக்கொண்டதனாலும்,

நாணய விடயத்தில் நெகிழ்ச்சித்தன்மை இன்றி, கடுமையான அரசிறை நிலைமைகளில் கிரேக்க அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமையில், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மக்கள் வீதியில் இறங்கி கலகத்தில் ஈடுபடுவதற்கு போதுமானவையாதலாலும்,

கிரேக்கப் பொருளாதாரம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து, கிரேக்க கடன் மீதான நம்பிக்கை படுமோசமான நிலையை அடைந்ததுடன் இறைமைக் கடன் தொடர்பாக ஏமாற்றம் நிகழலாம் என அதிகரித்த எதிர்பார்ப்புக்கு வழிவகுத்துள்ளமையினாலும்,

2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் தரமிடல் முகவரான 'மூடி' என்ற நிறுவனம் கிரேக்க படுகடனை எதிர்க்கணிய நோக்குடன் அதிகூடிய இடரை ஊகித்து மேலும் படுமோசமான "பெறுமதியற்ற" நிலைக்கு தரமிறக்கம் செய்துள்ளமையினாலும்,

இந்த நிலைமையில் முதலீட்டாளர்கள் உடனடியாக கிரேக்க முறிகளை "பெறுமதியற்ற பத்திரங்களாக" புறக்கணிக்க ஆரம்பித்து, கிரேக்க அரசாங்கம் கடன் செலுத்துவதற்கான நிபந்தனைகளை ஈடுசெய்வதற்கு சிக்கனப் பொதியை நடைமுறைப்படுத்த முடியாமல் யூரோ வலய, சர்வதேச நாணய விடுவிப்பு முடியாத நிலையில் அதன் விளைவுகள் அதிகரிக்க ஆரம்பித்ததாலும்,

இந்தப் பின்புலத்தில் இலங்கை மத்திய வங்கி 2011ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத ஆரம்பத்தில் கிரேக்க முறிகளில் பாரிய அளவிலான நட்டம் ஏற்படும் அளவுக்கு 22 மில்லியன் யூரோக்களை முதலிட்டுள்ளதாக சொல்லப்படுவதாலும்,

கிரேக்க முறிகளில் சிலவற்றை நட்டத்தில் விற்ற காரணத்தினால் இலங்கை மத்திய வங்கிக்கு பாரிய அளவில் நட்டம் ஏற்பட்டிருந்ததாக பத்திரிகைகள் வெளியிட்ட பின்னர் 2012 யூலை 17ஆம் திகதி இவ்விடயம் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டதாலும்,

இது உண்மையா எனவும், அவ்வாறெனின், முதலீடுகள் பற்றிய விபரங்களையும் அத்தகைய முதலீடு, குறிப்பாக நாணயச் சபையின் அனுமதியின்றி ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றியும் சர்வதேச நிதியக் கூட்டிணைப்பு அமைச்சரிடம் வினவியதாலும்,

சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சர் கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம இவ்வினாவுக்குப் பதிலளிக்கையில், உண்மையில் இலங்கை மத்திய வங்கி ஏப்ரல் மாத ஆரம்பத்தில் முறிகளில் முதலிட்டிருந்ததாகக் கூறியதாலும்,

அந்த முதலீட்டை நியாயப்படுத்துகையில், *"ஐரோப்பிய நிதியியல் உறுதிப்பாட்டுப் பொதியினால் ஆதரவளிக்கப்பட்ட நெருக்கடி முகாமைத்துவத்துக்கான வலுவான சட்டகம் ஒன்றினால் அந்நேரத்தில் (2011 ஏப்ரல் 5) மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் (கிரேக்க முறிகளில் முதலிடல்) செல்வாக்குச் செலுத்தியதாக"* கௌரவ அமைச்சர் கூறியதாலும்,

*"அந்நேரத்தில் உலகளாவிய நிதியியல் அதிகாரிகள் உருவாக்கிய இந்தப் பாரிய நிதி கிரேக்கத்தைக் காப்பாற்றியதாகக் கூறியதாலும், எனவே. இந்தச் சூழ்நிலையில், அந்த இடர் நியாயமான அளவு குறைவாகவும் தாங்கக்கூடியதாகவும் கருதப்பட்டது"* என கௌரவ அமைச்சர் மேலும் கூறியதாலும்,

மேலே சொல்லப்பட்ட சர்வதேச நிதயக் கூட்டிணைப்பு அமைச்சர் கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம அவர்களின் கூற்று சரியானதல்ல என அவதானிக்கப்பட்டுள்ளதாலும்,

கிரேக்க முறிகளில் இடர் அதிகமாகவும் ஏமாற்றமடைவதற்கான வாய்ப்பும் காணப்படுவதாலும்,

கிரேக்க முறிகளில் சொல்லப்பட்ட முதலீடு மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் ஐரோப்பிய நிதியியல் உறுதிப்பாட்டு வசதி (EFSF) அந்நாட்டுடன் எவ்வித ஒழுங்கையும் மேற்கொண்டிருக்கவில்லை என்பதாலும்,

"விருப்பத் தேர்வுக் கடன் வழங்குனர்" என்னும் அந்தஸ்துடன் நிரந்தர ஐரோப்பிய உறுதிப்பாட்டு உபாயம் (ESM ) தற்காலிக ஐரோப்பிய நிதியியல் உறுதிப்பாட்டு வசதியாதலால், இலங்கைக்குப் பயனளிக்காத நிதியியல் உறுதிப்பாட்டு வசதியில் (EFSF ) இருந்து கிரேக்கம் விடுவிப்பைப் பெற்றாலும் அது சர்வதேச நாணய நிதியத்துக்கு மட்டுமே இரண்டாம்பட்சமானது என்பதாலும்,

"விருப்புத் தேர்வுக் கடன் வழங்குனர்" அந்தஸ்து என்பதன் பொருள் யாதெனில், ஐரோப்பிய உறுதிப்பாட்டு உபாயத்தினால் (ESM ) மேற்கொள்ளப்பட்ட விருப்புரிமை ஒழுங்கிலான கொடுப்பனவு சர்வதேச நாணய நிதியம் நீங்கலாக, ஏனைய எல்லா தரப்புகளையும் விட விருப்புரிமை கொண்டிருக்கும் என்பதாலும்,

இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ஏமாற்றமடைவதற்கான பாரதூரமான நெருக்கடியைக் கொண்டிருப்பதாலும்,

உண்மையில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடு மிகுந்த ஆபத்துக்குள்ளாகியிருக்கும்போது அது பாதுகாப்பானது எனக் குறிப்பிட்டு கௌரவ அமைச்சர் சபையை பிழையாக வழிநடத்தியதாலும்,

கிரேக்க முறிகளில் இலங்கை மத்திய வங்கியினால் முதலீடு மேற்கொள்ளப்பட்டதை உடனடுத்து, கிரேக்க அரசாங்கம் மீண்டும் தடுமாறி, அதன் கடன் வீதம் உலகில் அதி தாழ்ந்ததாக தர இறக்கம் செய்யப்பட்டுள்ளதாலும்,

2011 ஒற்றோபர் மாதமளவில் கடன் வழங்குனர்கள் அவர்களின் கடனில் 50 சதவீதத்தை பதிவழிப்பதற்கு இணங்கியதால் கிரேக்கம் கட்டுப்படுத்தப்பட்ட தவறுதல் நிலைக்குச் சென்றதாலும்,

இலங்கை மத்திய வங்கியும் தனது முதலீட்டு மிகுதிகளில் (மிகுந்த கழிவில் விற்றதன் பின்னர்) கொண்டிருந்த 53.5 சதவீத கிரேக்க முறிகள் நாட்டிற்குப் பாரிய நட்டம் ஏற்படும் வகையில் ஒழித்ததாலும்,

சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சர் கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம 2012 ஜூலை 17ஆம் திகதிய கூற்றில் உண்மையை வெளியிடாது, *"அந்த நேரத்தில் கிரேக்கத்தைப் பாதுகாப்பதற்காக உலகளாவிய நிதியியல் அதிகாரிகள் உருவாக்கிய பாரிய நிதியம் காரணமாக இடர் நியாயமானதாகவும் தாங்கக்கூடியதாகவும்* இருப்பதாக கூறி முதலீட்டை நியாயப்படுத்தி சபையை பிழையாக வழிநடத்தியதாலும்,

(அ) இலங்கை மத்திய வங்கியினால் கிரேக்க முறிகளில் 22 மில்லியன் யூரோக்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளமை சம்பந்தமாக கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம இச்சபையை பிழையாக வழிநடத்தியுள்ளாரா எனவும் மற்றும் எந்தளவுக்கு சபையை அவர் தவறான வழியில் இட்டுச் சென்றுள்ளார் எனவும் தீர்மானிக்கவும்,

(ஆ) இந்நிலைமையில் என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதை சபைக்குப் பரிந்துரைக்கவும்,

ஒரு பாராளுமன்றத் தெரிகுழு நியமிக்கப்பட வேண்டும் என இச்சபை தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகர் அவர்களால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை 95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவுகளை அழைப்பிப்பதற்கும் பாராளுமன்றத்தின் அல்லது அத்தகைய குழுவின் முன்னிலையில் சமுகமளிக்குமாறு எவரேனும் ஆளை ஆணையிட்டழைக்கவும் அத்தகைய ஆளின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரம், புத்தகப் பதிவு அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்கச் செய்யவும்;

(இ) சாட்சியங்களை வாய்மூல விசாரணை மூலம் மெய்ப்பிப்பதற்கும் அல்லது வேறு விதமாக உறுதிப்படுத்துவதற்கும் குழுவின் தவிசாளர் அல்லது விசேடமாக அந்நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளினால் நிர்வகிக்கப்படும் விதமாக சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிப் பிரமாணத்தின் மீதமைவாக சாட்சிகளை விசாரிக்கவும்;

(ஈ) குழுவிற்கு உதவி வழங்குவதற்காக குறிப்பிட்ட துறையில் துறைசார் நிபுணர்கள் மற்றும் கைதேர்ந்தவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிக்கவும் பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பினால் தடைபெறாது அமர்வதற்கும்;

குழு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் அறிக்கையை அதன் முதலாவது அமர்வில் இருந்து ஒரு வருட காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கக் கூடியவாறான அத்தகைய வேறு அல்லது மேலதிக காலத்தில் தயாரித்தல் வேண்டும்.